192/நி1/2023

பதிவஞ்சல் ஒப்புகை அட்டையுடன்

**மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் (FAC), சென்னை-6, அவர்களின்**
**செயல்முறை ஆணை**

பிறப்பிப்பவர் : மரு.V.P.ஹரிசுந்தரி, எம்பிபிஎஸ்.,டிசிஎச்.,

ந.க.எண்.49469/நிபி8/1/2022 நாள்: 24.03.2023

பொருள்: நிர்வாகம் – தமிழ்நாடு அமைச்சுப் பணிகள் – கருணை அடிப்படையில் பணிநியமனம் – திரு.சு.சீனிவாசன், (த/பெ (லேட்) திரு.சுந்தரமூர்த்தி, துப்புரவு பணியாளர், அரசு மருத்துவமனை, செய்யூர், காஞ்சிபுரம் மாவட்டம்) – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணியமர்த்தப்பட்டது – பணிவரன்முறை – ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ1) துறை, நாள்: 23.01.2020 மற்றும் அதன் தொடர்புடைய ஆணைகள்.
2. அரசு கடித எண்.39901/ஏடி2/2019/2, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (ஏடி2) துறை, நாள் 26.02.2020
3. அரசு கடித எண்.8014/ஏடி2/2021-1, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (ஏடி2) துறை, நாள் 20.05.2021.
4. இவ்வியக்க கூடுதல் இயக்குநர் (நிர்வாகம்) அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.44588/நிபி8/1/2019, நாள் 18.05.2020.
5. இவ்வியக்கக பணியமர்த்தல் ஆணை ந.க.எண்.18802 /நிபி2/2/2020, நாள் 18.05.2020.
6. திருவண்ணாமலை மாவட்ட நலப்பணிகள் இணை இயக்குநரின் கடித ந.க.எண்.5160/நி2/2020, நாள் 08.08.2022.

------

**ஆணை :**

காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர், அரசு மருத்துவமனையில் துப்புரவுப் பணியாளராகப் பணிபுரிந்து பணியிலிருக்கும் போதே 21.02.2003 அன்று இயற்கையெய்திய திரு.சுந்தரமூர்த்தி, என்பவர் 10.01.1980 பணிவரன்முறைப்படுத்தப்பட்டு, 09.01.1981 பிற்பகல் தகுதிகாண்பருவம் முடித்துள்ளார். அவரின் பிறந்த தேதி 15.06.1952, அவர் ஓய்வு பெற வேண்டிய நாள் 30.06.2012 ஆகும். இறந்த அரசு ஊழியரின் வாரிசுதாரராகிய அவரது மகன் திரு.சு.சீனிவாசன் என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணிவேண்டி உரிய காலக்கெடுவுக்குள் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பித்திருந்தார்.

பார்வையில் கண்டுள்ள அரசாணைகள் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் விதி (பணி நிபந்தனைகள்) பிரிவு 17(1) 2016 (தமிழ்நாடு சட்டம் 24/2016)-ன்படி, காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர், அரசு மருத்துவமனையில் துப்புரவுப் பணியாளராகப் பணிபுரிந்து பணியிலிருக்கும் போதே 21.02.2003 அன்று இயற்கையெய்திய திரு.சுந்தரமூர்த்தி என்பவரின் மகன் வாரிசுதாரருமாகிய திரு.சு.சீனிவாசன் (பிறந்த தேதி 05.06.1983) தமிழ்நாடு அமைச்சுப்பணியின் கீழ் கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராகப் ரூ.19500-62000/- நிலை 8 (Level-8) என்ற சம்பள முறையில் பணிநியமனம் செய்யப்பட்டு, திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி, அரசு மருத்துவமனையில் 21.08.2020 அன்று முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார்.

எனவே, கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட திரு.சு.சீனிவாசன் என்பவரின் தற்காலிக இளநிலை உதவியாளர் பணியினை பார்வை-1இல் காணும் அரசாணையின்படி அவர் பணியில் இணைந்த நாளான 21.08.2020 முற்பகல் முதல் அவர் அப்பணிக்குத் தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு அன்னாரின் தற்காலிக பணியினை, பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடப்படுகிறது. இவ்வாணை வெளியிடப்படுவதன் மூலம் தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள் / ஊதிய நிலுவை இருப்பின் அதைப்பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

V.P.ஹரிசுந்தரி,
மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள்
இயக்குநர் (FAC)

பெறுநர்
திரு.சு.சீனிவாசன்,
இளநிலை உதவியாளர்,
அரசு மருத்துவமனை, வந்தவாசி, திருவண்ணாமலை மாவட்டம்.
-- நலப்பணிகள் இணை இயக்குநர், திருவண்ணாமலை மூலமாக

நகல்
1) நலப்பணிகள் இணை இயக்குநர், திருவண்ணாமலை.
2) மருத்துவ அலுவலர்,
அரசு மருத்துவமனை, வந்தவாசி, திருவண்ணாமலை மாவட்டம்.
3) நிர்வாகப்பிரிவு – 2.
4) இருப்புக்கோப்பு / உபரி –1.

// உண்மை நகல் // அனுப்பப்படுகிறது //

இணை இயக்குநர் (நிர்வாகம்)

3/4/23 9/3/4